රාජ්‍ය පරිපාලන හා ආපදා කළමනාකරණ අමාත්‍යාංශය
பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
MINISTRY OF PUBLIC ADMINISTRATION & DISASTER MANAGEMENT

ඒකාබද්ධ සේවා අංශය இணைந்த சேவைகள் பிரிவு COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

| දුරකතන தொலைபேசி: Telephone | ෆැක්ස් தொலைநகல்: Fax | ඊ-මේල් மின்னஞ்சல்: E-mail | වෙබ් අඩවිය இணையத்தளம்: Web Site |
|---|---|---|---|
| **(94) 011- 2694560** | **(94) 011- 2692254** | **dgcs@pubad.gov.lk** | **www.pubad.gov.lk** |

| මගේ අංකය எனது இல My No | ඔබේ අංකය உமது இல Your No | දිනය திகதி Date |
|---|---|---|
| COMS/Trans/වා.ස්.මා./2019 | | 2019.01.30 |

அமைச்சு செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள்

**<u>இணைந்த சேவைகளின் வருடாந்த இடமாற்றங்கள் - 2019</u>**

மேற்படி விடயம் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள PSC/APL/1/AT/2018 மற்றும் 2019.01.22 திகதிய கடிதத்துடன் தொடர்புடையது.

02. வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமை புரியும், 2019 வருடாந்த இடமாற்றம் பெற்ற இணைந்த சேவைகளின் உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழு கீழ்க்கண்டவாறு தீர்மானங்களை வழங்கியிருப்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

I. தற்போது வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தில் பணியாற்றும் மற்றும் முன்னைய 15 வருட காலப்பகுதிக்குள் விருப்பத்திற்குரிய சேவை நிலையம் ஒன்றில் 5 வருடங்கள் சேவை புரிந்துள்ள இணைந்த சேவைகளின் உத்தியோகத்தர்களை வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு வெளியே இடமாற்றம் செய்தல்.

II. 2018.01.01 அன்று வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்தும் மற்றும் அத்திகதியிலிருந்து அடுத்த 5 ஆண்டுகள் அத்திணைக்களத்திலேயே சேவையாற்ற கோரிய மற்றும் முன்னைய 15 வருட காலப்பகுதிக்குள் விருப்பத்திற்குரிய சேவை நிலையம் ஒன்றில் 5 வருடங்கள் சேவையாற்றாத இணைந்த சேவையின் உத்தியோகத்தர்களுக்கு அது தொடர்பாக இடமளித்தல்.

III. வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திலிருந்து வெளியே இடமாற்றத்திற்காக விண்ணப்பித்து இடமாற்றங்கள் பெறப்பட்ட உத்தியோகத்தர்களின் விருப்பத்திற்கு அமைய இடமாற்றங்களை அமுல்படுத்துதல்.

ஒப்பம்/. கே. வீ. பீ . எம். ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள் :

01. செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு. - தகவலுக்காக

02. பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம். – மேலே கூறப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழு முடிவுகளுக்கு இணங்க தங்கள் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு உங்களுக்கு அறியத்தருகின்றேன்.